தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 19-12-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நாட்டு நலப்பணி சார்பில் வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் பல்கலைக்கழக அளவிலான ஆலோசனைக் குழு கூட்டம் நேற்று (18.12.2015) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தலைமையில் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா அவர்கள், 2014-2015ம் ஆண்டு நிகழ்வுகளை பட்டியலிட்டு, மண்டல வாரியாக கல்லூரிகளின் குழுக்களுடன் ஆலோசனை செய்து 2016ம் ஆண்டுக்கான வரைவுத் திட்டத்தை தயார் செய்தார். இதில் மரம் நடுதல், ரத்த தானம், மருத்துவ முகாம் தவிர நீர் நிலைகளைப் பாதுகாத்தல், மழை நீர் சேகரிப்பு, ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து பள்ளிகளில் விழிப்புணர்வு, ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று மாணவர்கள் சமூகக் கடடை ஆற்றுதல் மாடித்தோட்டம் அமைத்தல், மாணவர்களின் திறன் மேம்படுத்துதல், தற்காப்பு பயிற்சி அளித்தல், மண்வளம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) ச. மகிமைராஜா அவர்கள், இத்திட்டங்களை ஒருங்கிணைத்தார்.

நாட்டு நலப்பணித் திட்ட தென் மண்டல மைய இயக்குனர் திரு. சாமுவேல் செல்லையா அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழ துணைவேந்தரின் ஆய்வு நடவடிக்கைகளைப் பாராட்டியதோடு இனி வரும் காலங்களிலும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்குப் பிறகும் மக்களிடம் ஏற்படுத்திய தாக்கத்தைப் படிக்க வேண்டும் என்றார். காருண்யா பல்கலை ஒருங்கிணைப்பாளர் ஆர். மகேஷ்பிரபு மற்றும் பாராதியார் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் டி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று கருத்துரை வழங்கினர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 2015ம் ஆண்டு நாட்டு நலப்பணித் திட்ட செயல்பாடுகள் குறித்த காணொலி மாணவர் செல்வன். மோகன்தாஸ் அவர்களால் திரையிடப்பட்டது. விழாவில் பல்கலக்கழக பதிவாளர் முனைவர் கு.ரா. ஆனந்தகுமார், உறுப்பு மற்றும் இணைப்புக் கல்லூரிகளின் முதன்மையர்கள் உட்பட 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் மு.ரா. லதா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்